# இடம் பொருள் கலைஞர் 75

**பல்வேறு துறைகளில் தொலைநோக்குப் பார்வையுடன், முத்தமிழறிஞர் கலைஞர் செயல்படுத்திய திட்டங்கள், உருவாக்கிய கட்டமைப்புகள் குறித்து இந்தப் பகுதியில் பார்த்து வருகிறோம். இந்த வாரம் பெரியார் அறிவியல் தொழில்நுட்ப மையம்!**











# பெரியார் அறிவியல் தொழில்நுட்ப மையம்!

## வீட்டுக்கு வந்த அறிவியல்

தமிழ்நாடு, பெரியார்மண், சமூகநீதிக்களம் என்பதை காலத்துக்கேற்பவும், சூழலுக்கேற்பவும் எப்போதும் நிரூபித்தே வந்திருக்கிறது. அதற்குக் காரணம் அவர் முன்னெடுத்த சமூகநீதி அரசியல் அடித்தளம். கூடவே, அதற்கிணையாக அவர் நடத்திய மூடநம்பிக்கை ஒழிப்புப் பிரச்சாரமும் ஒரு காரணம் எனலாம்.

எதையும் ஆராய்ந்து, அறிந்து ஏற்றுக்கொள்ளச் சொன்னதுடன், நம்பிக்கைகளைத் தாண்டி நிரூபிக்கப்பட்ட உண்மைகளை ஏற்றுக்கொள்வதற்கு வழிகாட்டினார் பெரியார். அதனால்தான், தமிழ்நாட்டு மக்கள் உண்மைகளின் பக்கம் நிற்கின்றனர். அந்த வகையில், அறிவியல் பக்கம் அதிக சாய்மானம் கொண்டிருக்கிறோம். அப்படியான அறிவியல் பரவலாக்கத்துக்கு, ஆட்சி அதிகாரத்தின் மூலமும் வழி ஏற்படுத்தியவர் முத்தமிழறிஞர் கலைஞர் என்று சொல்ல முடியும். அதிலும் குறிப்பாக, பெரியார் பெயரில் அதை நிகழ்த்தினார்.

கல்லூரிகளில் அறிவியல் படிப்பு, தொழில்நுட்பக்கல்வி நிறுவனங்கள், கணினித் தொழில்நுட்பம், தமிழில் பொறியியல் கல்வி, தகவல் தொழில்நுட்பக் கொள்கை என அவரது ஆட்சிக் காலங்களில் எல்லாம் அறிவியல் கண்ணோட்ட பரவலாக்கத்துக்கு உறுதுணையாக நின்றார். அந்த வகையில், ‘தமிழ்நாடு அறிவியல், தொழில்நுட்ப மையம்’ மூலமான அறிவியல் சிந்தனைகள் வளர்ச்சிக்கு கலைஞரின் பங்களிப்பு கவனிக்கத்தக்கது.

### அறிவியல் தொழில்நுட்ப மையம்

பொதுமக்கள் மத்தியிலும், மாணவர்களிடமும், அறிவியல், தொழில்நுட்பக் கருத்துகளைக் கொண்டு சேர்ப்பதற்காக, ‘தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையம்’, உயர்கல்வித் துறை அமைச்சரை, தலைவராகக் கொண்டு 1983-ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசால் தன்னாட்சி நிறுவனமாக உருவாக்கப்பட்டது. இந்த மையம் உருவாக்கப்பட்டபோது, ‘நடமாடும் அறிவியல் கண்காட்சி’ தவிர, வேறு தீவிரமான பணிகளை முன்னெடுக்கவில்லை.

தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையத்தின் மூலம், சென்னையில், 1988-ஆம் ஆண்டு சென்னையில் **‘பி.எம்.பிர்லா கோளரங்கம்’** நிறுவப்பட்டது. இந்த மையத்துக்கு சிறப்புச் சேர்த்தது 1990-ஆம் ஆண்டு, கலைஞர் முதலமைச்சராக இருந்து துவக்கி வைத்த **‘பெரியார் அறிவியல் தொழில்நுட்ப மையம்’** தான். அதன் பின்னர் பிர்லா கோளரங்கம், இந்த மையத்துடன் இணைந்து செயல்படத் தொடங்கியது.

### காட்சிக் கூடங்கள்!

12 தலைப்புகளில் அறிவியல் தொழில்நுட்பக் காட்சிக்கூடங்கள், ஒரு முப்பரிமாண திரையரங்கம் மற்றும் அறிவியல் திரையரங்கத்தையும் இந்த மையம் கொண்டுள்ளது. இயந்திரப் பொறியியல், போக்குவரத்துக் காட்சிக் கூடம், அணு அறிவியல் காட்சிக் கூடம் என இந்த மையம் மாணவர்களை அறிவியல் பக்கம் ஈர்க்கும் வகையில் உள்ளது. அறிவியல் பற்றிய சந்தேகங்களை விளக்கி கூறுவதற்காக, அறிவியல் அறிஞர்களைச் சந்தித்தல், அறிவியலை செயல்முறைகள் மூலமாக விளக்கிக் கூறுதல், இரவு வான்நோக்குதல் போன்ற நிகழ்ச்சிகளை இந்த மையம் நடத்தி வருகிறது.

1989-ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பேற்ற அடுத்த ஓர் ஆண்டில், செப்டம்பர் 17-ஆம் தேதி இந்த மையத்தை பேராசிரியர் அவர்கள் தலைமை வகித்த நிகழ்ச்சியில், முத்தமிழறிஞர் கலைஞர் துவக்கி வைத்தார். அதன் பின்னர், 2009-ஆம் ஆண்டில் கலைஞர் முதலமைச்சராக இருந்தபோது நவீனமாக்கப்பட்டு, 360 டிகிரி கோணத்திலும் பார்க்கும் வானியல் திரையரங்கம் இந்தியாவிலேயே முதன்முறையாக சென்னை மையத்தில் அமைக்கப்பட்டது.

### அண்ணா அறிவியல் மையம் - கோளரங்கம், திருச்சி

சென்னையில் அமைக்கப்பட்டது போலவே. 1996-ஆம் ஆண்டு ஆட்சி காலத்தில், 1999-ஆம் ஆண்டில், திருச்சியில் அண்ணா அறிவியல் மையம்-கோளரங்கம் நிறுவப்பட்டது. திருச்சி மற்றும் அதனைச் சுற்றியுள்ள பிற மாவட்ட மக்களிடமும், மாணவர்களிடமும் அறிவியல் கருத்துக்களைப் பரப்பும் விதமாக உருவாக்கப்பட்ட இந்த மையத்தில், சென்னையில் உள்ளது போலவே, ‘அறிவியல் தொழில்நுட்பக் காட்சிக் கூடம்’, ‘முப்பரிமாண திரையரங்கம்’, ‘கோளரங்கம்’, ‘அறிவியல் பூங்காக்கள்’ மற்றும் ‘பரிணாம வளர்ச்சி பூங்கா’வும் அமைக்கப்பட்டன. ஆட்சிமாற்றத்துக்குப் பின், கவனிக்கப்படாமல் முடங்கிய இந்த மையம், பின்னர் 2006-ஆம் ஆண்டில் புதுப்பிக்கப்பட்டு, பொலிவு பெற்றது.

> **ஆசிரியர்கள், மாணவர்கள், இளம்தொழில் முனைவோர்கள், தொழில்நுட்பவியலாளர்கள், குடும்பத் தலைவிகள், மாற்றுத் திறனாளிகள் என அனைவருக்கும் ஏற்றவாறு அறிவியல், தொழில்நுட்ப நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன.**

### டாக்டர்.கலைஞர் கருணாநிதி மாவட்ட அறிவியல் மையம், வேலூர்.

2006-2011 ஆட்சிக் காலத்தின்போது உருவாக்கப்பட்டது வேலூரில் அமைந்துள்ள டாக்டர். கலைஞர் கருணாநிதி மாவட்ட அறிவியல் மையம். 2011-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முத்தமிழறிஞர் கலைஞர் இந்த மையத்தினைத் திறந்து வைத்தார். இந்த மையத்திலும் அறிவியல் தொழில்நுட்பக் காட்சிக் கூடங்களும், முப்பரிமாண திரையரங்கமும் உள்ளன. வேலூர், அதனைச் சுற்றியுள்ள மாவட்ட மக்களுக்கும், மாணவர்களுக்கும் அறிவியல் கருத்துகள் மற்றும் அறிவியல் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

### நோக்கம் - பணிகள்

அறிவியல் மையங்கள் அமைந்திருக்கும் பகுதி சார்ந்த மாணவர்களும், பொதுமக்களும் அறிவியல் தொழில்நுட்பப் பயன்பாடுகளைப் பெறும் வண்ணம் அப்பகுதிகளில் அறிவியல் கண்காட்சிகள், கருத்தரங்குகள், அறிவியல் முகாம்கள், அறிவியல் சொற்பொழிவுகள், பயிற்சி வகுப்புகள் எனப் பல்வேறு அறிவியல் சார்ந்த நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன.

பள்ளி மற்றும் கல்லூரிகளில் அறிவியல் பாடங்களை எளிதாகக் கற்க துணை செய்யும்விதமாக அவ்வப்போது பாடத்திட்டம் சாரா அறிவியல் நிகழ்ச்சிகளை நடத்துதல், கல்வியியல் நிகழ்ச்சிகளை நடத்துதல் ஆகியவற்றின் மூலம் அறிவியல் மனப்பான்மையும் திறன் உருவாக்கமும் மாணவர்களிடையே மேம்படுத்தப்படுகிறது.

அறிவியல், தொழில்நுட்பமையங்களுக்கான காட்சிப் பொருட்களைத் திட்டமிடுதல், வடிவமைத்தல், மற்றும் செயலாக்குதல். அறிவியல் பரப்புரைகளுக்காக செய்முறை கருவிகளையும் துணைக்கருவிகளையும் உருவாக்குதல் ஆகியவற்றின் மூலம் அறிவியல் கல்வி பரப்புரைப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

ஆசிரியர்கள், மாணவர்கள், இளம்தொழில் முனைவோர்கள், தொழில்நுட்பவியலாளர்கள், குடும்பத் தலைவிகள், மாற்றுத் திறனாளிகள் என அனைவருக்கும் ஏற்றவாறு அறிவியல், தொழில்நுட்ப நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன.

இப்படியான நோக்கங்ளைக் கொண்டு செயல்படும் அறிவியல் மையங்கள் மாணவர்களிடையே அறிவியல் கண்ணோட்டத்தை உருவாக்குகின்றன, என்பதை மறுக்க முடியாது. அறிவியல் கண்ணோட்டத்தின் வளர்ச்சிதான் தமிழ்நாட்டில் மருத்துவ அறிவியல், பொறியியல் தொழில்நுட்பம், உயிரித் தொழில்நுட்பம், தகவல் தொழில்நுட்பம் என அடுத்தடுத்த வளர்ச்சிகளுக்கு வழிநடத்தி சென்றது என்றால், மிகையில்லை.

2000-ஆம் ஆண்டில், கிராமங்கள்தோறும் புதிய தெருவிளக்குகள், குழல் விளக்குகளை சோடியம் ஆவி விளக்குகளாக மாற்றியபோது, **‘வீதிகளில் விளைந்த விண்மீன்கள்’** என அதற்குப் பெயர் சூட்டினார் கலைஞர். விண்மீன் அறிவியலை வீதி மக்கள் புரிந்து கொள்ளச் செய்துவிட்டு, அதை கவிதைக்குள் எடுத்துச் சென்றது, அவர் ஆளுமை. அப்படித்தான் அறிவியலை நமக்கு அருகில் கொண்டு வந்தார் கலைஞர்.

**...வலம் வருவோம்**


## கொண்டாடும் ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகம்!

கால்டுவெல், ஜி.யூ.போப், வீரமாமுனிவர் என்ற பெஸ்கி, பென்னிகுக் போன்ற தமிழ்மொழிக்கும் தமிழ்நாட்டிற்கும் தொண்டு செய்த வெளிநாட்டு அறிஞர்களுக்கு சிலை வைத்துக் கொண்டாடுகிறது, தமிழ்நாடு. அந்த மரபின் தொடர்ச்சியாக, சிந்துவெளிப் பண்பாட்டை 1924-ஆம் ஆண்டு உலகிற்கு அறிவித்த ஜான் மார்ஷலுக்கு சென்னையில் முழு திருவுருவச்சிலை அமைக்கப்படும், என்று தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.

அதைப்போல, தமிழ்நாட்டில் தரங்கம்பாடியில் முதல் அச்சுக்கூடத்தை, 1712-ஆம் ஆண்டு நிறுவிய சீகன்பால்கு சிலையுடன்கூடிய அரங்கம் அமைக்கவும் ஆணையிட்ட, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவிப்புக்கு தமிழ் ஆர்வலர்கள், அறிஞர்கள் பாராட்டுகளைத் தெரிவிக்கின்றனர்.

சிந்துவெளி ஆய்வு மையத்தை அமைத்து, ஆய்வு மேற்கொண்டு வருவதுடன், 1713-ஆம் ஆண்டு சீகன் பால்குவால் எழுதப்பட்டு தரங்கம்பாடியில் அச்சடிக்கப்பட்ட ‘அக்கியானம்’ என்ற நூலின் ஒரு பிரதியைப் பாதுகாத்து வரும் ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகம் அரசின் முன்னெடுப்புகளுக்காக முதலமைச்சருக்கு நன்றி அறிவிப்பினை வெளியிட்டுள்ளது.

## ஃப்ளாஷ்பேக்



நாராயணன்



### ஊர்க்காரர் நிகழ்ச்சியில் உரிமையுடன் விருது!

1996-ஆம் ஆண்டு, ஏவி.எம் நிறுவனத்திற்கு பொன்விழா ஆண்டு. சென்னை வடபழனி ஆவிச்சி வளாகத்தில் நடைபெற்றது. அப்போது, ஏவி.எம். நிறுவனத்தில் பணிபுரிந்த 120க்கும் மேற்பட்ட ஊழியர்களைக் கௌரவிக்கும் வகையில், சிறப்பாகக் கொண்டாட ஏவி.எம்.சரவணன் அவர்கள் முடிவெடுத்தார். அதுவரை ஏவி.எம் நடத்திய 13 நிகழ்வுகளுக்கும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களே தலைமை வகித்திருந்தார், பொன் விழாவுக்கும் கலைஞர் அவர்களே தலைமை தாங்கினார். ஏவி.எம். நிறுவனத்துக்காக 2 திரைப்படங்கள், 2 சின்னத்திரைத் தொடர்களில் பணிபுரிந்ததால் நானும் விருது பெற்றேன். “என்னய்யா... ஊர்க்காரர் நிகழ்ச்சியில் விருது வாங்குறியா?” என்று ஏவி.எம்.சரவணன் அவர்களைச் சுட்டிக்காட்டி, சிரித்துக் கொண்டே கேட்டார். அப்போது எடுக்கப்பட்ட படம் இது.

**–காரைக்குடி நாராயணன், திரைப்படத் தயாரிப்பாளர் & இயக்குநர், சென்னை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### பலதார திருமணத் தடை மாநாடு!

1950-ஆம் ஆண்டு, சென்னை, தேனாம்பேட்டையில் ‘பெண்கள் மாநாடு’ ஒன்றை கழகம் நடத்தியது. 1949-ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தில் பிரதமர் நேரு தாக்கல் செய்த இந்து சட்டத் திருத்தத்தை இந்த மாநாடு ஆதரித்தது. பலதார மணம் கூடாது. பல பெண்களை ஓர் ஆண் மணக்கும் அநீதி கூடாது, ஆணைப் போல பெண்ணுக்கும் சொத்தில் பங்கு உண்டு, விவாகரத்து செய்துகொள்ள ஆணுக்கு மட்டுமல்ல; பெண்ணுக்கும் உரிமை உண்டு என்பதை, அந்தச் சட்டதிருத்தம் முன்மொழிந்தது. இந்தச் சட்டத் திருத்தம் அவசியமானது, என தி.மு.கழகப் பெண்கள் மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

521

எழுத்து: கோவி.லெனின்

ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131